1987 மே 4]

11. திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையினை ஒளி விளக்குகளால் அலங் கரித்தல்.	5.25	4.725	..
12. காஞ்சிபுரத்தில் பல்லவபுர சுற்றுலா மையம் அமைத் தல்.	20.00	5.00	..
13. குற்றாலத்தில் உணவு விடுதி கட்டுதல்.	5.44	2.00	..
14. '' டிரெக்கிங்'' உபகரணங் கள் வாங்க.	4.655	4.1895	..
15. முதுமலை வனவிலங்குகள் சரணாலயத்திற்கு இரண்டு சிறிய ஊர்திகள் வாங்குதல்.	2.5237	1.26185	..
16. பிச்சாவரத்தில் உணவு விடுதி வளாகம் கட்டுதல்.	5.91	2.00	..
மொத்தம் ..	153.9887	63.19635	5.75

இணைப்பு—II.

(352 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 583-க்கான விடையைக் காண்க.)

(அ) கலப்பு மணம் செய்துகொள்ளும் தம்பதியர்களுக்கு கீழ்க்காணும் சலுகைகள் வழங்கப்படுகின்றன :—

1. தம்பதியரின் ஆண்டு வருவாய் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாய் இருந்தால், தம்பதியரின் திருமணச் செலவிற்கென ரூ. 300 ரொக்கமாக அளிக்கப்பட்டு வருகின்றது.

2. 1978-ம் ஆண்டு செப்டம்பர் 18 முதல் கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியருக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதுடன், 14 காரட் தங்கத்தில் செய்த 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் வழங்க ஆணை வழங்கப்பட்டது. 1979–80 முதல் 1983-84 ஆம் ஆண்டு வரை தகுதி வாய்ந்த தம்பதியர் களுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்க தங்க நகைகள் செய்யும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1987 மே 4

நிறுவனங்கள் 44 காரட்டால் ஆன தங்கப்பதக்கங்கள் செய்ய தற்சமயம் முன்வராததால் 22 காரட்டால் ஆன தங்கப்பதக்கங்கள் வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

3. தம்பதியரின் இணைந்த ஆண்டு வருவாய் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாய் இருந்தால், அத்தம்பதியர்களின் இணைந்த பெயரில் தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ. 4,000 ஆறு ஆண்டுகளுக்கு முதலீடு செய்யப்படும். ஆறாம் ஆண்டின் முடிவில் வட்டியுடன் கூடிய தொகையை அத்தம்பதியினர் இருவரும் பிரியாதிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. சிறு தொழில்களுக்கான கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த தம்பதியருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகின்றது.

5. சென்னையைத் தவிர மற்ற இடங்களில் வசிக்கும் தம்பதியினருக்கு அவர்களுக்கென சொந்தமாக மனை/வீடு இல்லாமல் இருப்பின், 3 சென்ட் பரப்புள்ள வீட்டு மனை ஒப்படை செய்யப்படுகின்றது.

6. சென்னையில் வசிக்கும் தம்பதியினருக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக கைத்திறன் பணியாளர்களுக்கான மனை/வீடு இவற்றினை தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் வாங்குவதற்கென ரூ. 1200 முன் பணமாக (அதாவது முதல் தவணைத் தொகையாக) செலுத்தும் பொருட்டு மொத்த மானியமாக வழங்கப்படுகின்றது.

7. மாதம் ரூ. 250-க்குக் குறைந்த வருமானமுள்ள கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ், ஒவ்வோராண்டும் 10 வீடுகளைத் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஒதுக்கீடு செய்கிறது.

8. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்குப் பிறக்கும் குழந்தைகள் அப்பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு ஏற்ப தந்தையின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது தாயின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ கருதப்படுவர். ஒரு குழந்தை தொடர்பாக அளிக்கப்படும் உறுதிமொழி இத் தம்பதியினரின் எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்தும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1987 மே 4]

9. கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிட மக்களுக்கும் 1976-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ந் தேதி முதல் இத்திட்டம் பொருந்துமாறு செய்யப்பட்டது.

10. கலப்புத் திருமணத் தம்பதியருக்குப் பிறந்த குழந்தைகளுக்கு எம்.பி.பி.எஸ். முதலாண்டு வகுப்பில் சேர 12 இடங்களும், இந்திய மருத்துவக் கல்லூரியில் சேர 2 இடங்களும், இந்திய மருத்துவப் பட்டய வகுப்பில் சேர ஓர் இடமும் பொறியியல் கல்லூரியில் சேர 5 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

(ஆ) வேலை வாய்ப்பகங்களில், கலப்புமணத் தம்பதியரில் யாரேனும் ஒருவர் ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினராக இருந்தால் அத்தம்பதியருக்கு மட்டும் ஆதி திராவிடர் (மற்றும்) பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டில் தொகுதி I -ல் முதல் முதல் முன்னுரிமை அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இணைப்பு—III.

(381 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு காவல் துறை.

ஆய்வுரை.

1. ஒரு நாட்டின் வளர்ச்சியும், அதனுடைய மக்களின் முன்னேற்றமும், அந்த நாட்டில் நிலவி வரும் சூழ்நிலையைப் பெருமளவு பொறுத்துள்ளது. நாட்டு வளர்ச்சிக்கு அடிகோலும் வகையில் தகுந்த சூழ்நிலையை உருவாக்குவது அந்த நாட்டு அரசின் தலையாய பொறுப்பாக அமைகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் சட்டம், ஒழுங்கு போன்றவற்றைப் பாதுகாப்பது மட்டும் அரசினுடைய முக்கிய கடமையாக இருந்தது. அத்துடன் பொது நலனில் சிறிதளவு மட்டுமே ஈடுபாடு காட்டினால் போதுமெனவும் கருதப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய அரசு செயல்படும் முறைகளைப் பற்றிய தத்துவங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இன்று மக்கள் நலனே அரசினுடைய முக்கிய குறிக்கோளாக விளங்குகிறது. மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யும் அளவுக்குத் தேவையான பொருளாதார அடிப்படையை உருவாக்குவதும் அரசினுடைய முக்கிய கடமையாக உள்ளது. பொருளாதார வளர்ச்சியைத்